பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(17.06.2023 முதல் 21.06.2023 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 48 (06) PJN/GKMS/2023 தேதி: 16.06.2023

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (11.06.2023 முதல் 15.06.2023 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -21.06.2023 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/06 | 12/06 | 13/06 | 14/06 | 15/06 | | நாள்-1 17/06 | நாள்-2 18/06 | நாள்-3 19/06 | நாள்-4 20/06 | நாள்-5 21/06 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 5 | 8 | 14 | 6 | 4 |
| 39 | 40 | 40 | 39 | 39 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 38 | 37 | 36 | 36 | 36 |
| 27 | 26 | 27 | 27 | 28 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 29 | 28 | 28 | 27 | 26 |
| 2 | 1 | 2 | 2 | 2 | மேக மூட்டம் | 5 | 8 | 8 | 7 | 5 |
| 44-76 | 45-75 | 49-81 | 43-76 | 42-71 | ஈரப்பதம் (%) | 30-70 | 40-70 | 60-90 | 60-80 | 50-70 |
| 8 | 6 | 6 | 6 | 6 | காற்றின் வேகம் (கி.மீ) | 16 | 14 | 12 | 19 | 12 |
| மேற்கு தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (17.06.2023 முதல் 21.06.2023 வரை):**

- ஜூன் 17 லிருந்து 21 வரை லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 26-38 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 30-90 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 12-19 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- ஜூன் 21 லிருந்து 27 வரை மழை (3.78 மி.மீ) இயல்பிற்கு அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (33.63 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.55 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | கடந்த சில வாரங்களாக நிலவிய வறண்ட வானிலை, அதிகமான பகல் மற்றும் இரவு வெப்பநிலை மற்றும் மிதமான ஈரப்பதம் ஆகியவை பருத்தியில் மாவுப் பூச்சிக்கு சாதகமாக இருந்ததினால் அதன் தாக்குதல் சில இடங்களில் காணப்படுகிறது. எனவே அதனைக் கட்டுப்படுத்த மீன் எண்ணெய் ரோசின் சோப் @ 25 கிராம் / லிட்டர் அல்லது வேப்பெண்ணெய் 2% (20 மிலி/லிட்டர்) அல்லது வேப்பங்கோட்டைச்சாறு 5% அல்லது |

| | | |
|---|---|---|
| | | புயுப்ரோபிசின் 25 SC @ 2 மிலி/ லிட்டர் அல்லது ப்ரோபெனோபாஸ் 50 EC @ 2 மிலி/ லிட்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| | | காரைக்கால் பகுதியின் சில இடங்களில், வறண்ட வானிலைக்கு பிறகு பெய்த மழையினாலும், மிதமான ஈரப்பதம் மற்றும் பருத்தியில் அதிகப்படியான தழைச்சத்து பயன்படுத்தியதனாலும் பருத்தியில் வாடல் நோய் காணப்படுகிறது. எனவே, இதனைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட செடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஆரோக்கியமான செடிகளின் வேர் பகுதியினை சுற்றியிலும் ஒரு லிட்டர் நீரில் ஓர் கிராம் கார்பென்டசிம் அல்லது 0.75 கிராம் ட்ரைபிலொக்சிஸ்ட்ரோபின் + டெபுகோணசோல் கலந்த புசணக் கொல்லி கரைசலினால் நன்றாக நனைக்க வேண்டும். |
| கால்நடை | - | தற்பொழுது நிலவும் அதிக வெப்பம் காரணமாக கால்நடைகளில் வெப்ப அயர்ச்சி நோய், இளஞ்சிவப்பு கண் நோய் மற்றும் வெப்ப மடிவீக்கம் நோய் தாக்க வாய்ப்புள்ளது. எனவே, கால்நடைகளை கோடை வெப்பத்திலிருந்து பாதுக்காக்க கீழ்வரும் வழிமுறைகளை பின்பற்றலாம்.<br>கால்நடை கொட்டைகளின் மேற்பரப்பில் வைக்கோல், உலர்ந்த புற்கள், பனை ஓலைகள், தென்னை ஓலைகள் அல்லது தென்னை நார்க்கழிவுகளை பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத் தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.<br>கால்நடைகளை காலை 06 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 04 முதல் 06 மணி வரையிலும் மேய்ச்சலுக்கு அனுப்பலாம்.<br>கால்நடைகளுக்கான குடிநீர் தொட்டிகளின்மேல் சூரிய வெப்பம் தாக்காவண்ணம் கூரை அமைத்து கால்நடைகளுக்கு குளிர்ந்த குடிநீரை அளிக்க வேண்டும்.<br>கால்நடைகளை தினமும் இருவேளை குளிப்பாட்ட வேண்டும்.<br>கால்நடைகள் அதிகமாக தண்ணீர் பருகுதல், வேகமாக மூச்சு விடுதல், அதிகமாக உமிழ்நீர் வடிதல், பசியின்மை, நடுக்கம் மற்றும் கீழே விழுதல் போன்ற வெப்ப அயற்சிக்கன அறிகுறிகள் தென்பட்டால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க வேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் பயிர்களுக்கு நீர்பாய்ச்சுவதை தவிர்க்கவும்.

**முதல்வர்**